**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C.344/2023**

**Prosecution witness : அ.சா. 10** **Date : 28.10.2024**

| | |
|---|---|
| **Name : சுப்பிரமணி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

முதல் விசாரணை

1) நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2020ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 07.09.2020-ம் தேதி மதிணம் 2.00 மணிக்கு மேச்சேரி காவல்நிலையத்தில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது, சேலம் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த சுதாகர் த.பெ. ஆறுமுகம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.819/2020 u/Sec. 147, 148, 448, 294(பி), 324, 326, 506(2) IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 4** ஆகும்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி ஆகிய நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 07.09.2020 ம் தேதி மாலை 4.30 மணிக்கு சம்பவ இடம் வாளதாசம்பட்டி வாதி சுதாகர் வீட்டின் பின்புறமாக சென்று சாட்சிகள் கோவிந்தன் மற்றும் முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 5** மற்றும் **அ.சா.ஆ 6** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் சுதாகர், கந்தசாமி, சாந்தி, பெரியக்கா, செல்வி, சின்னகுழந்தை, கோபால், சிவாஜி, கோவிந்தன் மற்றும் முருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில்

காயமடைந்த பெரியக்கா, சுதாகர், கந்தசாமி என்பவருக்கு முதலில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன். பெரியக்கா அவர்களுடைய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7** ஆகும். சுதாகர் அவர்களுடைய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.8** ஆகும். கந்தசாமி அவர்களுடைய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.9** ஆகும். இவ்வழக்கில் காயம்பட்ட பெரியக்கா மற்றும் சுதாகர் இருவரும மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விஸ்வநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன்.

5. இவ்வழக்கின் எதிரிகள் 1 முதல் 8 வரை உள்ளவர்கள் கடந்த 17.09.2020ம் தேதி மாண்புமிகு மாவட்ட நீதிமன்றதில் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்ய மார்கமில்லை. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணை செய்ததன் அடிப்படையில் வாக்குமூலம் பதிவு செய்ததன் அடிப்படையில் சங்கீதா மற்றும் ஸ்ரீதேவி வழக்கு சம்பவத்தில் ஈடுபடதாக காரணத்தினால் இருவரும் எதிரி நீக்கல் அறிக்கையில் இருந்து நீக்கப்பட்டார்கள். எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 26.09.2020ம் தேதி **நி.கு.எண்.819/2020 u/Sec. 147, 148, 448, 294(பி), 324, 326, 506(2) IPC** பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் சம்வம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்குக்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒரு தலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**